
# 31ஆம் நாள் நினைவாக..!



மருதங்கேணியைப் பிறப்பிடமாகவும்
இராமநாதபுரத்தினை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் சின்னத்தம்பி சாமிநாதன்

அவர்களின்
சிவபதப்பேறு குறித்து வெளியிடப்படும்
நினைவு மலர்
09.02.2016

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மருதங்கேணியைப் பிறப்பிடமாகவும் இராமநாதபுரத்தினை
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் சின்னத்தம்பி சாமிநாதன்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்து வெளியிடப்படும்

## 31ம் நாள் நினைவு மலர்

## 09.02.2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்


எங்கள் குடும்பத்திற்கு வழிகாட்டும் ஒளியாக
இருந்து வளம் சேர்த்து அன்புத்
துணைவராய், பாசமிகு தந்தையாய்,
மதிப்புமிகு மாமாவாய், பேரப்பிள்ளைகட்கு
நேசமிகு அப்பப்பாவாய் வாழ்ந்திருந்த
வேளையில் இடியொன்று வந்து எம்
தலைமேல் விழுந்ததைப் போல் கடிதெனக்
காலனால் கவர்ந்துகொள்ளப்பட்ட எங்கள்
குல தெய்வத்தின் ஆத்மா சாந்திபெற
வேண்டி இம்மலரை அவரது பாதார
விந்தங்களில் சமர்ப்பித்து பணிவுடன்
வணங்குகின்றோம்.

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவாக...!



தாயின் மடியில்

1946

04

20

இறைவன் அடியில்

2016

01

10

## அமரர் சின்னத்தம்பி சாமிநாதன்

அவர்களின் திதி வெண்பா

ஆண்டு மன்மதம் மார்கழித்திங்கள் இருபத்தைந்தாம் நாள்
பூண்டதிதி பூர்வபக்க பிரதமை தன்னில் – வானுயர நீண்டபுகழ்
புண்ணியவான் சாமிநாதன் தானும் மண்ணகன்று
விண்ணுலகில் புண்ணியவான் பாதமலர் சரணடைந்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்







## விநாயகர் துதி

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

## தேவாரம்

*இராகம் : ஹரிகாம்போதி*

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணினல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணினல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும் போது உணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

இராகம்: மோகனம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்
விரையார் கழற்கு என்
கைதான் தலை வைத்துக் கண்ணீர்ததும்பி
வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்த்து உன்னைப்போற்றி சயசய
போற்றி என்றும்
கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னைக்
கண்டு கொள்ளே.

## திருவிசைப்பா

இடர்கெடுத்தென்னை ஆண்டு கொண்டென்னுள்
இருட்பிழம்பு அறஎறிந்தெழுந்த
சுடர்மணி விளக்கினுள் ஒளி விளங்கும்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப்பாக அம்பலக்கூத்தா
அயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்ட னேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

- இராகம் ஆனந்தபைரவி -

மன்னுக தில்லை வளர்க நம்பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக்கு அருள்புரிந்து
பின்னைப்பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்கு பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்


- இராகம்
மத்தியமாவதி -

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகிறார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்றும் வேண்டு நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுண் அடியின் கீழ் இருக்க வென்றார்.

## திருப்புகழ்

- இராகம் தேஷ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமானே.



## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறையரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## தேற்றம்

சோடிழந்த அன்றிலைப் போற் துயரமானேன்
தோகைமயில் வாயிலகப்பட்ட சர்ப்பமானேன்
காடுகளின் இனம் பிரிந்த கலைகளானேன்
கனைகடலில் காற்றடிக்கும் தெப்பமானேன்
ஓடுகின்ற பாய்மரத்தின் காகமானேன் உற்றார்
ஒருவரில்லாப் பித்தனானேன்
பாடுபட நானறியேன் பழனி வேலா
பச்சைமயில் மீது வந்து இரட்சிப்பாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாமிநாதன் அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

நெய்தல் மருதம் முல்லை ஆகிய நிலப்பகுதிகளைக் கொண்ட பனந்தோப்புகளும் தென்னஞ்சோலைகளும் சூழ்ந்துள்ள முன்னைய அரசர்களின் ஆளுகைக்குட்பட்ட பெருமைக்குரிய பிரதேசம் வத்திராயன்.

இப்பிரதேசத்தில் உள்ள மருதங்கேணி என்ற ஊரில் 20.04.1946ல் இவர் பிறந்தார். இவர் நீதி தவறாது வாழ்ந்த சின்னத்தம்பி கதிராத்தை குடும்பத்தில் நான்கு பெண்பிள்ளைகள் பிறந்து நான்கு வருடங்களின் பின் கடைக்குட்டியாய்ப் பிறந்தார். இவர்களின் மூதாதையர்களில் ஒருவரான சடையர் என்பவரால் அமைக்கப்பட்டு வழிபட்டுவந்த வைரவர் கோவிலில் இவரது தாயார் மிகுந்த பற்றுடையவர் . இவ் வைரவரை வேண்டித் தாயார் விரதமிருந்து வழிபட்டதால் நான்கு வருடங்களின் பின்பு இவர் பிறந்தார். தாயார் வயிற்றில் இவர் இரண்டு மாதக்குழந்தையாக இருந்தபோது இவரது தந்தையார் காலமானார். இவர்களின் குல தெய்வமான வைரவர் கோவிலில் பூசகராக இருந்த பொன்னையா என்பவரால் இவருக்கு சாமிநாதன் எனப் பெயரிடப்பட்டது.

இவருடைய சகோதரிகளுடன் இவரும் அருகில் இருந்த மருதங்கேணி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வி கற்றார். இப்பிள்ளைகளில் காணப்பட்ட பழக்கவழக்கம் திறமை என்பனவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுற்ற தலைமை ஆசிரியர் திரு. முத்தையா இவர்களில் கடைசி மூவரையும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்த்துவிட்டார். மூத்த இருபெண் பிள்ளைகளும் தாயாருக்கு உதவியாக வீட்டில் இருந்தனர்.

இவர் பாடசாலைக் கல்வியை முடித்ததும் கிளிநொச்சியில் ஆசிரியராக இருந்த சின்னக்காவிடம் வந்து சேர்ந்தார். அந்தக்காலத்தில் இவருக்கு நெல் சந்தைப்படுத்தல் சபையில் வேலை கிடைத்தது. பின்னர் இவரது சின்னக்கா, தங்களைப் போன்ற குடும்ப, குலதெய்வ வழிபாட்டை நடாத்தும் நெற்செய்கையில் விற்பன்னனான வேலுப்பிள்ளை புவனேஸ்வரி குடும்பத்தில் மூன்றாவது மகளான இராசேஸ்வரிக்கு 24.01.1975 திருமணம் செய்து வைத்தார்.

இவர்களின் அன்பும் பண்பும் நிறைந்த ஒற்றுமையான, வந்தாரை வரவேற்று விருந்தாளிக்கும் குடும்பத்தில் நான்கு நற்புத்திரர்கள் தோன்றினர். மூத்தவர் மண்மீட்பில் முனைப்புக்காட்டி மாமனிதனானார். ஏனைய மூவருக்கும் ஏற்ற கல்வி புகட்டி அரச வேலைகளில் சேர வைத்தார். உரிய காலத்தில் உரிய மணமக்களைத் தேடி திருமணஞ் செய்து வைத்தார். இவர்களின் இல் வாழ்க்கைப்பேறாக நல்ல பேரப்பிள்ளைகளைக் கண்டு களிப்புடன் இருந்தார்.

இப்படியாக இன்பமாக வாழ்ந்து கொண்டிருந்த வேளை இவரது மூத்த சகோதரிகள் ஒருவர் பின் ஒருவராக விரைவில் காலமாயினர். இவற்றால் துன்புற்றிருந்த இவர் தானும் அவர்களைப் பின் தொடர்ந்து இறைவனடி சேர்ந்தார்.

இவருடைய நற்கருணை நற்செயல்கள் மக்கள் மனதில் நின்று நிலைபெறும் இவ்வாறான நிலையில் இவருடைய ஆத்மாவும் இறைவன் திருவடிகளைச் சேர்ந்து இன்புறட்டும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*- சி.பரமசிவம் மருதங்கேணி -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
☎ : 021 3207584, 021 2280024
Fax : 021 2221585, 021 2280024
Mobile : 077 6913244
Email : shritharanmp@gmail.com
Web : www.shritharan.com

පාර්ලිමේන්තුව
**பாராளுமன்றம்**
**PARLIAMENT**

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
☎ : 021 3207584, 021 2280024
Fax : 021 2221585, 021 2280024
Mobile : 077 6913244
Email : shritharanmp@gmail.com
Web : www.shritharan.com

2016.01.25.

## மக்கள் பணிக்கான மகத்தான மனிதன்

இறைவனடி சேர்ந்த சாமிநாதன் அவர்கள் கிளிநொச்சியில் மதிப்போடு வாழ்ந்தவர். இவர் வாழ்ந்த காலத்தில் இளமைக்குரிய துடிப்போடும் போராட்ட உணர்வோடும் வாழ்ந்தவர். திருமணமாகி இராமநாதபுரத்தில் வாழ்ந்த 40 ஆண்டுகளில் எமது மாவட்டத்தின் பிரதான தொழிலான நெற்செய்கையில் ஈடுபாடு காட்டினார். அக்காலத்தில் புகழ்பூத்த விவசாயியாகவும் , விவசாய குடும்பங்களுக்கு முன்னோடியாகவும் திகழ்ந்தார்.

உறவுகளை அன்போடு வரவேற்று உணவளித்து மகிழ்வுறும் குடும்பத் தலைவரான இவர் தமிழ்த்தேசிய உணர்வு மிகுந்தவர். இதனால் இவரது மகன் விடுதலைப் போராட்டத்திற்கு தன்னை அர்ப்பணிப்பு செய்தவர். இவர் நெல் சந்தைப்படுத்தும் சபையில் 50 ஆண்டுகள் பணிபுரிந்த இவர் கிளிநொச்சி , முல்லைத்தீவு , வவுனியா , மன்னார் கிளைகளில் பணிபுரிந்த போதும் விளையாட்டுத்துறையை வளர்க்க அரும்பாடுபட்டார். பொருளாதாரத்தடை எமது மண்ணில் இருந்த போது அத்தியாவசிய பொருட்களை இங்கு எடுத்து வருவதில் அதிக ஈடுபாடு காட்டினார்.

அத்தகைய மனிதனது பணிகள் காலம் காலமாக மண்ணில் நின்று நிலைபெறும். இவரது குடும்ப உறவினர்கள், ஊரவர்கள் , நண்பர்கள் ஆறுதல் அடையவும் இவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி,

சி. சிறீதரன்
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆயிரம் சொந்தங்கள்
அணைத்திட இருந்தாலும்...
தந்தையே உன்னைப் போன்று
அன்பு செய்ய யாருமில்லை
இவ் உலகில்...

நான் பார்த்த முதல் முகம்!
நான் பேசிய முதல் வார்த்தை!
நான் மறக்கவே முடியாத முதல் ஓவியம்
எங்கள் அப்பா..

நிஜம் என்று எண்ண எந்தன்
நெஞ்சம் மறுக்கிறதே

குடும்பமே கோயிலென்று
ஒரு குடை நிழலினிலே
வைக்காத்த மாமாவே — இப்போ
விதியின் விளைவிதென்று
விடைபெற்று விட்டீர்கள்
நிஜம் என்று எண்ண எந்தன்
நெஞ்சம் மறுக்கிறதே
உள்ளத்து உணர்வெல்லாம்
ஊமையாய் போயிடவே
சிறகொடிந்த புள்ளினமாய் —வலது
கரமொடிந்த மானிடனாய்
கதறித் தவிக்கின்றோம்
அனலிடை வெந்திடும்
புழுவாய் துடிக்கின்றோம்



காற்றிலே வந்த செய்தியதும் பொய்யாக
கண்ணால் கண்ட காட்சியதும் பொய்யாக
மீண்டொரு கால் வந்தென்னை
மகளே என்று அழைத்திடுங்கள்
அப்பப்பா வருவாரென்று சொல்லும் எம்
பிள்ளைகட்கு வந்தேன் இதோவென்று
ஒரு வார்த்தை பகருங்கள் (சு. நிலா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் செயலகம்
வடமாகாணம், 124, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

OFFICE OF THE MINISTER OF EDUCATION, CULTURAL AFFAIRS, SPORTS & YOUTH AFFAIRS
Northern Province, 124, Adiyapatham Road, Kalviyankadu, Jaffna.

My No. | Your No | Date 2016.01.26

அமரர் சாமிநாதன் அவர்கள் சில மாதங்களிற்கு முன்னர் மாலை வேளை எனது வீட்டிற்கு வந்து என்னிடம் நீண்ட நேரமாக அளாவளவிச் சென்றார். மிகவும் திடகாத்திரமான உடலமைப்போடு இருந்த அவருடன் பல விடயங்கள் பற்றிப் பேசியதை நினைத்துப் பார்க்கையில் திடீரென இவ்வுலகை விட்டுச்சென்று விட்டார் என்ற செய்தி மனதை நெருடுவதாக அமைகிறது. அமரர் இறந்த செய்தி கூட எனக்கு எட்டவில்லை. அன்னாருக்கு இறுதி அஞ்சலியை என்னால் செலுத்த முடியாமையையிட்டு வருந்துகிறேன்.

அமரர் சாமிநாதன் அவர்கள் எனது பெற்றோருடனும், சகோதரர்களுடனும் நல்லுறவைப் பேணிய ஒருவர். எனது தகப்பனார், நவஜீவனம் பண்ணையை ஆரம்பித்த ஆரம்ப நாட்களில் எம்முடன் இணைந்து அங்கு வாழ்ந்தவர். என்னை இறுதியாகச் சந்தித்தபோது பல்லாண்டுகளுக்கு முன்னர் நடந்த பல சம்பவங்களைச் சுவைபட எடுத்தியம்பினார். 60களின் நடுப்பகுதியிலே கோரக்கன்கட்டிலே நவஜீவனத்தினரால் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அங்கு சாமிநாதன் அவர்கள் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அரைக்காற்சட்டை அணிந்து துவிச்சக்கரவண்டியிலே கோரக்கன்கட்டு பாடசாலைக்கு அவர் சென்றகாட்சி இன்னும் எம் மனதிலே பசுமையாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருடனும் கள்ளம் கபடமற்ற முறையில் நன்றாக உரையாடுவார். உலக விடயங்களை நன்கு அறிந்த ஒரு விவசாயியாக திகழ்ந்தவர். தனது பிள்ளைகளையும் , மனைவியையும் அன்பாகப் பராமரித்து அவர்களுக்கு வேண்டிய செல்வங்களைப் பெற்றுக் கொடுத்த சிறந்த தந்தை.

அண்மைக் காலத்தில் அவர் மிகவும் சுறுசுறுப்பாக ஒரு விவசாயியாக மாறி தனது உடலை கட்டுக்கோப்பாக வைத்திருந்தார். என்னைச் சந்திக்க வரும்போது துவிச்சக்கரவண்டியிலே இராமநாதபுரத்திலிருந்து வந்திருந்தார். இளம் சந்ததியினருக்கு 60ம் ஆண்டுகளின் வரலாறுகளைக் கதைகளாக சொல்லக்கூடிய ஒரு மூத்த மனிதனை இழந்து விட்டோம் என்ற கவலை என்னுள்ளத்திலே எழுகிறது.

அமரர் சாமிநாதன் அவர்களுடைய ஆத்மா சாந்தியடைய இறைவனின் பாதாரவிந்தங்களை வேண்டுகின்றேன்.

திரு.த.குருகுலராசா.
கௌரவ கல்வி,பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை.
மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்,
வடக்கு மாகாணம்.

அமைச்சர் [illegible] Minister } 021-205 4094
அலுவலகம் [illegible] Office } 021-205 4091 (Private Secretary) 021-205 4093 (P.R.O) 021-205 4092 (General)
தொலை நகல் [illegible] Fax } 021-205 4093
email: edumin.14@gmail.com

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் கல்வி கற்றவரின் அவதானிப்புக்கள்

சாமிநாதன் ஒரு பாடசாலை மாணவனாக கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஆறாம் வகுப்பில் கற்றபோது அதே வகுப்பு மாணவனாக அவரை முதலில் சந்தித்தேன் . கல்லூரி விடுதியில் தங்கியிருந்து அவர் படித்து வந்தார்.

மாணவரிடையே அவர் முதலில் பிரபலமானது ஒரு பாடகனாக சினிமாப் பாடல்களை நன்றாகப் பாடக்கூடியவராக இருந்தார். நகைச்சுவையாகப் பேசுவார். ஆசிரியர்களால் விரும்பப்பட்டார். திருமதி வில்லியம்ஸ் எனும் ஆசிரியை அவரால் மிக மதிக்கப்படுபவராக இருந்தார். குறிப்பிட்ட அளவு ஆங்கிலத்திலும் கூடிய அளவு கணிதத்திலும் ஆற்றலுள்ள மாணவனாக விளங்கினார். க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் எண் கணிதத்தில் சிறப்புச்சித்தி (Distinction) பெற்றவர்.

சாமிநாதன் மிகப்பிரபலமானது விளையாட்டு மைதானத்திலேயே எமது கல்லூரி விளையாட்டுக்குழுக்களில் இரண்டு குழுக்கள் மிகப்புகழ் பெற்றவையாக இருந்தன. கூடைப்பந்தாட்டக் குழுவும் ( Basket Ball Team ) ஹொக்கிக் குழுவும் ( Hockey Team ) பெரிய பாடசாலைகளுடனும் போட்டியிட்டுப் புகழ்பெற்றவை. சாமிநாதன் ஹொக்கிக் குழுவில் கோல் காப்பாளராக இன்றியமையாதவராக விளையாடினார்.

எமது கல்லூரிக் கால்பந்தாட்டக் குழுவிலும் சாமிநாதன் ஒரு வீரராக விளையாடினார். மற்ற இரு குழுக்களைப் போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்பந்தாட்டக்குழு யாழ்ப்பாணப் பிரபல பாடசாலைகளோடு போட்டியிடாவிடினும் வலிகாம பாடசாலைகள் மட்டத்தில் போட்டியிட்டது. பாடசாலை நாட்களின் பின்பும் சாமிநாதன் தொடர்ந்து கால்பந்து tpisahbtejhu;fps pehrrpay ;(Paddy Marketing Board ) நெல் சந்தைப்படுத்தும் சபையில் சாமிநாதன் தொழில்புரிந்தபோது கிளிநொச்சி மைதானத்தில் விளையாடியதைப் பலமுறை பார்த்திருக்கின்றேன். கல்லூரி நாட்களில் இருந்ததைப் போல் அதே வேகமும் அர்ப்பணிப்பும் இருந்ததைப்பார்த்து வியந்திருக்கின்றேன்.

எமது கல்லூரி நாட்களில் எமக்கு அதிபராக இருந்த

திரு. E.C.A நவரத்தினராஜா அவர்கள் எமது வழிகாட்டியாக இருந்தவர். மாலையில் கல்லூரி வளாகத்திலிருந்த அவரது இல்லத்தில் கிறிஸ்தவ வழிபாடு நடைபெறும் போது நானும் சாமிநாதனும் அவற்றில் கலந்து கொள்வது வழக்கம். குழு விளையாட்டுக்களில் ( Games) சாமிநாதனும் மெய்வல்லுநர் போட்டிகளில் ( Sports) நானும் ஈடுபட்டதால் பார்த்து மகிழ்வதைத் தவிர நான் சாமிநாதனோடு சேர்ந்து விளையாடியதில்லை . அந்நேரங்களுக்கு ஈடாக மேல் குறிப்பிட்ட வழிபாட்டு நேரங்களில் சாமிநாதனோடு நான் அதிகநேரம் செலவுசெய்திருக்கின்றேன். எந்நாளும் மறக்கமுடியாத நாட்களாக அவை இருக்கும்.

சமீப காலங்களில் அவரது கடைசி நாட்களுக்கு முன்பு நேரம் கிடைக்கிறபோது தனியாகவோ பேரப்பிள்ளையோடோ அவர் எனது வீட்டுக்கு வருவது வழக்கம் . அந் நாட்களில் கூட அவரது நகைச்சுவை உணர்வு சற்றும் குறைந்திருக்கவில்லை. சினிமாப்பாட்டுக்களையும் கிறிஸ்தவ கீதங்களையும் மறந்திருக்கவுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமிநாதனுடைய மறைவு எத்தனையோ பேருக்குப் பேரிழப்பு என்பதை நான் அறிவேன். அவரது மறைவு எனக்கும் பெரும் இழப்பாகத் தொடரும்.

இ. தனராஜா
ஓய்வு நிலை உதவிக்கல்விப்பணிப்பாளர்
ஆங்கிலம் ( வட்டக்கச்சி)

**"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்"**




**ஆளுக்கொரு தேதிவைத்து**
**ஆண்டவன் அழைப்பான்–இதில்**
**யார் அழுதால் அவனுக்கென்ன**
**காரியம் முடிப்பான் .**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் இணையற்ற விளையாட்டு வீரனான சாமிநாதன்

காலஞ்சென்ற சாமிநாதன் என் பாரியாரின் ஒரேயொரு தம்பி. இவர் அக்காக்களுடன் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி விடுதியில் இருந்து படித்தவர். பள்ளி வாழ்க்கையில் பிரபலமாகத் திகழ்ந்தவர்.

பெருவிளையாட்டுகளான கிரிக்கெட், உதைபந்தாட்டம் , ஹொக்கி விளையாட்டுக்களிலும் உள்ளக விளையாட்டான கரம் விளையாட்டிலும், இசை நிகழ்ச்சிகளிலும், பெருமதிப்புடன் திகழ்ந்தவர். எமது திருமணத்தின் பின் எம்மோடு இணைந்தவர். கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுப் போட்டிகளிலும், கிளிநொச்சி விளையாட்டு சபை போட்டிகளிலும், ஆரோகணம் விளையாட்டுக்கழக அணியின் வீரனாக மென்பந்து, கிரிக்கெட் போட்டிகளிலும் உதைபந்தாட்டப் போட்டிகளிலும் கலந்து கொண்டவர். அணியின் கூட்டு முயற்சிக்கும் திறன் வெளிப்பாட்டிற்கும் , வெற்றிக்கு பெரிதும் பாடுபட்டார். உதைப்பந்தாட்டத்தில் பிரபலமான பின்கள வீரனாகவும் மென்பந்து, கிரிக்கெட்டில் சிறந்த பந்து வீச்சாளனாகவும் , துடுப்பாட்ட வீரனாகவும் மதிக்கப்பட்டார். இவருக்கு விளையாட்டில் இருந்த ஊக்கம் பழக்கவழக்கம் என்பவற்றைக் கண்ணுற்ற உதவி அரசாங்க அதிபர் திரு. இ. யோகநாதன் இவரை நெற்சந்தைப் படுத்தல் சபையில் பணியாளராக இணைத்தார். இதன் பின்பும் இன்னும் ஊக்கமாக விளையாட்டில் ஈடுபட்டார்.

இவர் சபை முகாமையாளருக்கு பாரிய உதவியாளராக இருந்தார். ஆனால் தான் ஒரு உதவி முகாமையாளராக வர எண்ணவில்லை.

இவர் நெற்சந்தைப்படுத்தல் சபையின் , கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா கிளைகளில் பணியாற்றினார். தன் ஓய்வு நேரங்களை வீணாக்காமல் அங்கும் விளையாட்டில் ஈடுபட்டார். இக்காலத்தில் இங்கு பொருளாதார தடை உச்சத்தில் இருந்தது. இவர் உந்துருளியில் சென்று வரும்போது மக்களுக்கு அவரும் உதவியாக இருந்தார். பனடோல், பால்மா போன்ற அரிய பொருட்களைக் கொண்டு வந்து தேவையானவர்களுக்கு கொடுப்பார். அலுவலகப் பணிகளைச் செவ்வனே செய்வது போன்று ஏழைகளுக்கும் உறவினர்களுக்கும் உதவும் இந்த வாய்ப்பை இறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டாகச் செய்தார்.

1975ம் ஆண்டு தைமாதம் திருமணமாகி இராமநாதபுரம் சென்றார். இவரது பாரியார் குடும்பம் நெற்செய்கையில் பேர்பெற்றது. இவரும் அவர்களுடனும் உறவினர்களுடனும் இணைந்து ஒரு முன்னோடி நெற் செய்கையாளனாக உருவாகினார். வந்தாரை வரவேற்கும் அக் குடும்பங்களிலே இவரது குடும்பம் வரவேற்று உணவளித்து உபசரிப்பதிலே உயர்வானது. இவரது மூத்த மகன் இவர்களிற்கு குடும்ப நாட்டுப்பற்றை பறைசாற்றுவது போல் இன விடுதலைப் போரில் இளம் வயதில் இணைந்து மாமனிதனானவர். ஏனையவர் யாவரும் ஆண் பிள்ளைகள் அவர்கள் ஏற்ற கல்வி கற்று மாவட்டத்தில் முக்கிய அரச சேவைகளில் உள்ளனர். திருமணமானவர்களின் பாரியார்களும் அரச பதவிகளில் மதிப்பு மரியாதையுடன் திகழ்கிறார்கள். பேரப்பிள்ளைகளும் நற்பண்புகள் நிரம்பப் பெற்றவர்கள்.

இவர் ஊர் உறவுகளையும் உறவினர் உறவுகளையும் சீராகவே வளர்த்தவர். எந்த நேரமும் சுறுசுறுப்பாக ஓடி ஆடி உழைப்பவர். எவருக்கும் எந்த நேரமும் உதவும் குணவியல்பு கொண்டவர்.

இவர் அமைதியான காலங்களிலும் இடம்பெயர்ந்து ஓடித் திரிந்த காலங்களிலும் ஊர் உலகம் போற்ற வாழ்ந்தவர்.

தக்கார் தகவிலார் என்ப அவரவர்
எச்சத்தினால் காணப்படும்

என்ற வள்ளுவர் கூற்றுக்கு இணங்க இவரது நற்பணிகளாலும் தன் மக்களை அவையில் முன் நிறுத்திய பொறுப்பினாலும் சமுதாயத்திலும் இனத்தின் மத்தியிலும் தகமையுடையவராக வாழ்ந்து தனது வாழ்க்கையை நிறைவு செய்துள்ளார். இவர் இவ்வாறு இறைவனடி சேர்ந்து இன்பமாக வாழ்வார் என்பது தெளிவு.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

**நா.சோதிநாதன் முன்னாள் அதிபர்**
**கிளி / மத்திய கல்லூரி**
**(சாந்தி , கனகபுரம் –கிளிநொச்சி.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிசொரியும் பொழுதின் நினைவுகள்....

அன்றைய நாட்களில்
சிறியரக உந்துருளியில்
மனைவியை பின்னால்
ஏற்றி அவர் ஓடிவரும்
அழகோ அழகு...



அவரின் சிறிய
உருவத்தையும்
சீரிய செயற்திறனையும்
ஒப்பிடமுடியாது

வெட்டிப்பேச்சு இல்லை
நாட்டுக்காக ஒரு மகவை
தந்ததோடு
சமூகத்திற்கு சிறந்த
நற்பிள்ளைகளை தந்த
உதாரணத்தந்தை...

மனைவி சொல்
தட்டாத மாணிக்கம்
எல்லாவயதிலும் இவருக்கு
நண்பர்கள் உண்டு

அன்பான கணவனாக
பாசமுள்ள தந்தையாக
இனிய சகோதரனாக
உறவினனாக..
எப்போதுமே
நல்மனிதனாக
வாழ்ந்து எம்மை விட்டு
பிரிந்து சென்ற
சாமிநாதன் ஐயாவின்
ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றேன்.

– பே. டட்லிகரன் – (சிட்டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எங்கள் குடும்ப ஒளியின் சுடர் தணிந்த நேரத்தில் கண்ணீர் அஞ்சலிப்பிரசுரங்கள் மற்றும் பனர் (Banner) மூலம் தங்கள் அனுதாபங்களை வெளிப்படுத்தியவர்களுக்கு இதய பூர்வமான நன்றிகள்.**

01. சத்தியசீலன் புஸ்பராணி குடும்பத்தினர்.
02. கோகுலன் குடும்பம் - தம்பகாமம்
03. பிராந்திய மலேரியா தடை இயக்கம் , கிளிநொச்சி.
04. கோகுலன் , சுதர்சன். அங்குசன் , பிரபா
05. People's Leasing & finance PLC - கிளிநொச்சி
06. People's Leasing & finance PLC -வவுனியா
07. 2009 , கணித விஞ்ஞானப்பிரிவு
08. நேசன் , குணம்
09. லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகம் , வட்டக்கச்சி
10. நிதிக்கிளை, வலயக்கல்வி அலுவலகம்
11. வட்டக்கச்சி சாலை பேரூந்து உரிமையாளர்கள் , ஓட்டுநர்கள், நடத்துநர்கள்
12. நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம், உதயநகர் கிழக்கு
13. தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் கிளிநொச்சி
14. 3 Star விளையாட்டுக்கழகம்
15 சுப்பிரமணியம் குடும்பத்தினர், இராமநாதபுரம்
16. நண்பன் குணசீலன் - சுரேஸ் ஆட்ஸ்
17. கார்த்திக் ஸ்ரூடியோ, சந்தையடி , வட்டக்கச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவக் குறிப்பு :

ஒரு நோயாளி மருத்துவரை அணுகி மருந்து வகைகளைப் பெற்றுக்கொண்டால் , வைத்தியர் குறிப்பிட்ட நேரந்தவறாது , அளவுப்பிரமானம் தவறாமல் குறிப்பிட்ட காலம் முடியும்வரை மருந்துகளை உட்கொள்ள வேண்டும்.

## வியாதிக்கு மனமே காரணம்

ஒரு மனிதனின் மன நிலையில் தளர்வு , சுமை, அழுத்தம் என்பன இல்லை என்றால் உடல் நலம் ஆரோக்கியமாக இருக்கும். அச்சப்படுதல் முற்றாகத் தடுக்கப்படல் வேண்டும். உறைப்பு, உப்பு, கொழுப்பு என்பன குறைக்கப்படல் தேவை.

## மரம் வளர்த்தல்

வீடுள்ள வளவில் பலா, மா, வாழை , மாதுளை, திராட்சை , எலுமிச்சை, தென்னை , வேம்பு , மல்லிகை , முல்லை ,பவளமல்லி, கொன்றை, கற்பூரவள்ளி , நாரத்தை ஆகிய மரங்கள் செடிகள் கொடிகள் வளர்ப்பது நல்லது. முற்றத்தில் துளசிமாடம் அமைத்து வழிபடுவது சிறப்பு.

நெல்லி, விளாத்தி, புளி , முருங்கை, ஆமணக்கு, பருத்தி, பனை குடியிருப்புக்கள் அல்லாத வெளி வளவுகளில் வளர்க்கப்பட வேண்டும்.

**"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அற
ஆகுல நீர பிற"**

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை**

**"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொல்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவழி

சின்னத்தம்பி + கதிராத்தை ( இரத்தினம்)
↓
சின்னப்பிள்ளை (அமரர்)
↓
பொன்னம்மா (அமரர்)
↓
சின்னக்குட்டி ( அமரர்)
↓
சரஸ்வதி
↓
**சாமிநாதன் (அமரர்)** + **இராசேஸ்வரி**

வேலுப்பிள்ளை (அமரர்) + புவனேஸ்வரி (அமரர்)
↓
மகேஸ்வரி
↓
செல்லத்துரை
↓
முத்துலட்சுமி ( மாங்களம் )
↓
**இராசேஸ்வரி**
↓
செல்வவிநாயகமூர்த்தி (மூர்த்தி)
↓
தங்கேஸ்வரி ( ராணி )
↓
திருச்செல்வம் (ஜெயம் ) அமரர்
↓
சோதிலிங்கம் ( சோதி) அமரர்
↓
சறோசாதேவி ( பேபி )
↓
மனோகரன் அமரர்
↓
புஸ்பராணி

சாமிநாதன் + இராசேஸ்வரி:

- சாந்தகுமார் / வசந்தன் (அமரர்)
- துஷியந்தன் + ராதிகா → கஜானனி → சாருஜன்
- சுரேஸ்குமார் + நிலாகினி → லாவண்யா → காருண்யா
- தினேஸ்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கிறோம்

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு

எமது பாசத்தின் உறைவிடமாகவும் எம்மை இயக்குகின்ற
சக்தியாகவும் வாழ்ந்து அமரத்துவம் அடைந்த எமது
அன்புத்தெய்வம் அமரர் சின்னத்தம்பி சாமிநாதன்
அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள்
புரிந்தோருக்கும், நேரிலும் , தொலைபேசி மூலமும் கண்ணீர்
அஞ்சலிப்பிரசுரங்கள், பனர் மூலமும் தங்கள்
அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் இறுதி நிகழ்வில்
கலந்துகொண்ட உற்றார், உறவினர் , நண்பர்கள் ,
திணைக்களங்கள் சார் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும்
கிரியைகள் செய்வதற்கு உறுதுணை புரிந்த மத குருமார்கள்
மற்றும் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளில்
பங்குகொண்டு ஒத்தாசை வழங்கியோர்களுக்கும் இம்
மலரினை அச்சிட்டு உதவிய வேழன் பதிப்பகத்தினருக்கும்
எமது மனமார்ந்த நன்றிகளைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவம் என்பதே அறிவு

பிறப்பில் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்
அன்பெனப்படுவது யாதெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்
வறுமை என்பது யாதெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்
இறப்பின் பின்னது யாதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்.

அனுபவித்தே தான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்
ஆண்டவன் சற்று அருகில் நெருங்கி
அனுபவம் என்பதே நான் தான் என்றார்.

- கவிஞர் கண்ணதாசன் -



வேழன் பதிப்பகம் 021 228 5579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org